ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 3 | டிசம்பர் 1997 | கானம் : 5

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி


(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 3 டிசம்பர் 1997 கானம் : 5

## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 25 | 4 |
| 3. | தவமே மேன்மையானது | 7 |
| 4. | நக்ஷத்திரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 6 | 11 |
| 5. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள் - தொடர்ச்சி | 12 |
| 6. | பாவ லோகத்தில் ஒரு ஸஞ்சாரம் - 6 | 15 |
| 7. | வேத கதைகள் - 7 | 20 |
| 8. | ஸ்ரீ துளஸீயின் பெருமை | 22 |
| 9. | வேணு கானம் ப்ரஹ்மஸ்ரீ ஸரப ஸாஸ்த்ரிகள் | 23 |
| 10. | பாலகர்களுக்கு ஒரு கதை | 27 |
| 11. | ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து - 28 | 28 |
| 12. | செய்திகள் | 32 |
| 13. | நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள் | 32 |



நான்காவது ப்ரம்மோத்ஸவத்தில் தாயார் ஸஹிதராக உத்ஸவ பெருமாள்.

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ குருஜியின் கீர்த்தனம்

ராகம் : ஆனந்த பைரவி தாளம் : ஆதி

பல்லவி

*பாக்யம் உள்ளோரே வாருங்கள்*
*பரந்தாமன் புகழ் பாட (பாக்யம்)*

அனு பல்லவி

*ஸக்யமுடன் நாம் அனைவரும் கூடி*
*ஹரி கீர்த்தனத்தில் ஐக்கியம் ஆக (பாக்யம்)*

சரணங்கள்

*அன்னை மீரா சென்ற வழி இதுவே*
*அருமை குருவும் செப்பு மொழி இதுவே*
*தருணம் இதை நீர் நழுவ விடாதீர்*
*ஹரியின் மடியில் அமர்ந்திடலாமே (பாக்யம்)*

*ஹரி கீர்த்தனத்திற்கு நிகரில்லை காண்*
*பரிஸ்ரமம் இல்லை அவனைப் பாட*
*வேதத்தின் சாரம் ஹரியின் நாமம்*
*ஏதும் ஐயம் இல்லை இதுவே திண்ணம் (பாக்யம்)*

*ஓரணியில் நாம் அனைவரும் கூடி*
*தரணி தன்னில் அவன் புகழ் பாட*
*காளமேகமும் கேட்டு மகிழ*
*முரளீதரனும் பணிந்து நிற்க (பாக்யம்)*

## 25

கும்பகோணத்தில் வாழ்ந்து வரும் "அம்மாளு அம்மாள்" என்ற கிருஷ்ண பக்தையைப் பற்றி ஏற்கனவே ஒரு முறை எழுதியுள்ளேன். இளம் வயதிலேயே வைதவ்யம் அடைந்த இவர், பாண்டுரங்கனால் தடுத்தாட்கொள்ளப்பட்டார். ஸர்வத்தையும் பரித்யாகம் செய்து, பண்டரீபுரம் அடைந்து வைராக்யத்துடன் பண்டரீநாதனை பஜித்து வந்தார். சுமார் ஏழு வருட காலம் பண்டரீபுரத்திலேயே வாஸம் செய்தார். யுத்த சமயத்தில் மீண்டும், சில பக்தர்களின் அழைப்பை ஏற்று கும்பகோணம் வந்தார்.

சுமார் எழுபது வருடங்களாக சிறிது பாலும், பழமும் அல்லது தயிர் மட்டுமே புஜித்து வருகின்றார். அன்ன ஸ்பர்ஸமே இல்லாமல் வாழ்ந்து வருகின்றார். பணத்தையும் கையினால் தொடுவதில்லை. இது வரை சுமார் முப்பது ஆயிரம் கீர்த்தனைகளை தன்னுடைய மாத்ரு பாஷையான கன்னடத்தில் இயற்றியுள்ளார். இவைகள், புத்தி பூர்வமாக செய்யப்பட்ட க்ருதிகள் இல்லை. தானாகவே இவருக்கு இது மாதிரியான கீர்த்தனைகள் வந்து கொண்டிருக்கின்றன. ஆரம்பத்தில் எல்லாம், நர்த்தனத்துடனே பாட்டுகள் வந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு பாட்டு முடிவிலும் 'அம்மாளு ப்ரிய' என்ற முத்திரையும் வரும். ஒவ்வொரு கீர்த்தனையும் அவ்வளவு ரஸமாக இருக்கும். சந்தமும் மிகவும் அழகாக இருக்கும்.

எல்லா தெய்வத்தைப் பற்றியும் பாட்டுகள் வந்துள்ளன. ஆனால், இவைகளை வெளியிட பகவானின் அனுமதி கிடைக்கவில்லை. இவருடைய கீர்த்தனைகளில், தானாகவே க்ஷேத்ர மஹாத்மியம், பாடும் ஸ்வாமியின் வைபவம் எல்லாம் வருகின்றன. அவருடைய பஜனைகள் - தாளம், ராக ஆலாபனைகள் இல்லாமல் மிகவும் பாவத்துடன் இருக்கும். நம் ஸ்வாமிகளுக்கு, அவருடைய பஜனையை நம் ஸ்ரீநிவாஸ பெருமாளும், ப்ரேமிக வரதனும் கேட்க வேண்டும் என்ற ஆசை வந்தது.

நம்முடைய பெருமாளும் எப்போதும் யாராவது பஜனை செய்பவர்கள் வருகின்றார்களா என்றே ஏக்கத்துடன் பார்த்து கொண்டு இருப்பான். பாகவதர்களைக் கண்டால் நம் பெருமாளுக்கும் அவ்வளவு குஷி.

இதுவரை எங்கும் வெளியில் சென்று பஜனை செய்திராத இந்த மஹா பக்தை, நம் பெருமாளின் ஸந்நிதிக்கு வந்து பஜனை நிகழ்த்தினார்கள். நம் ஸ்ரீநிவாஸ பெருமாள், யோக தேவதையாக இருப்பதால் ஒரு வைராக்ய பரமான கீர்த்தனை வந்தது. நம்முடைய ப்ரேமிக வரதன் விஷயமாக பால லீலைகளை வர்ணித்து ஒரு பாட்டும் வந்தது. அதில் ப்ரேமிக வரதன் குழலூதி ஸகலரையும் மயக்குகின்றான் என்றும், தினமும் புது புது வஸ்திரங்களே, அதுவும் அகலமான ஜரிகை போட்டதாக தனக்கு வேண்டும் என்று யசோதையிடம் பிடிவாதம் பிடிக்கின்றான் என்றும் வந்தது.

''ப்ரேமிக வரதன், மாடு மேய்த்து விட்டு தாயார் கட்டிக் கொடுத்த ஆகாரத்தை உட்கொண்ட பிறகு, யமுனையில் கையினாலேயே அள்ளி அள்ளி ஜலத்தைப் பருகுகின்றான். அவன் நாகரீகம் தெரியாதவன் இல்லை. ஒரு கிண்டியோ பாத்திரமோ கொண்டு அள்ளி குடித்தால், யமுனா தேவி, தனக்கு க்ருஷ்ண ஸ்பர்ஸம் கிடைக்கவில்லையே என்று வருத்தப்படுவாள். அதற்காகத்தான் கைகளினாலேயே அள்ளி பருகுகின்றான்'' என்றெல்லாம் வந்துள்ளன. இது போல், அநேக பால லீலைகளும் ரஸமாக, இந்த கீர்த்தனத்தில் வந்துள்ளன.

அன்று முதல், தினமும், ப்ரேமிக வரதனுக்கு வெண்ணை சமர்ப்பிக்கப்படுகின்றது. ஒரு நாள் சாற்றிய வஸ்திரத்தை மறு நாள் சாற்றுவதில்லை. அம்மாளு அம்மாள், காஞ்சி மஹா பெரியவாள் ஸ்ரீ சந்திரசேகர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பரிபூரண கிருபைக்கு பாத்திரமானவர்கள்.


(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்.**

---

வேதம், சாஸ்த்ரம், இதிஹாஸம், புராணம், பஜனம், ஸத் ஸங்கம், குருவின் ஸங்கம் இவைகளினால் நம் மனது உலக விஷயங்களை விட்டு உள்முகப்படவில்லை என்றால் அவற்றினால் ஒரு ப்ரயோஜனமும் இல்லை.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்.**



# தவமே மேன்மையானது

மஹாபாரதத்தில், சைத்ரரத பர்வம் வஸிஷ்ட உபாக்யானத்தில், கந்தர்வன் வஸிஷ்டருடைய மஹாத்மியத்தைப் பற்றி அர்ஜுனனுக்குச் சொல்லும் பொழுது, வஸிஷ்ட விஸ்வாமித்ரர்களிடையே ஏற்பட்ட விரோதத்தையும், அதில் வஸிஷ்டரிடம் விஸ்வாமித்ரர் தோற்றதும் சொல்லப்படுகிறது. இந்த வஸிஷ்ட சரித்ரம் எல்லா லோகங்களிலும் புராணம் என்று கொண்டாடப்படுகிறது.

கான்ய குப்ஜ தேசத்தில், குசிகரின் புத்திரரான காதி என்ற ஒரு மஹாராஜா இருந்தார். அவருடைய புத்திரர் விஸ்வாமித்ரர். தன்னுடைய பெரிய சேனைகளாலும், வாஹனங்களாலும் பகைவரை அழிக்கும் வல்லமையுடையவராயிருந்தார். ஒரு சமயம், அவர் தன் சேனைகளுடன் காட்டிற்குச் சென்று வேட்டையாடிக் கொண்டிருந்தார். அழகான மலைகளிலும், பாலைவனங்களிலும், மான்களையும், பன்றிகளையும் பல மிருகங்களையும் வேட்டையாடி, அதன் சிரமத்தினால் களைப்புற்ற அவர், தாகத்தை தணிக்க, தண்ணீரை விரும்பி, வஸிஷ்டருடைய ஆஸ்ரமம் நோக்கி வந்தார்.

ஸ்ரேஷ்டர்களைப் பூஜிப்பவராகிய வஸிஷ்ட மஹரிஷி, ராஜ ஸ்ரேஷ்டரான விஸ்வாமித்ரர் வந்ததைக் கண்டு அவரை வரவேற்று அர்க்ய, பாத்ய, ஆசமனீயங்கள் கொடுத்து அன்னத்தையளித்து உபசரித்தார். வஸிஷ்டரிடம் காமதேனு என்ற ஒரு பசு இருந்தது. விஸ்வாமித்ரர், மற்றும் அவருடைய சேனைகளுக்கு உபசரிப்பதற்காக வஸிஷ்டர் காமதேனுவைப் பார்த்து, ''காமதேனு, வேண்டியவற்றைக் கொடு'' என்று கட்டளையிட காமதேனுவும் வந்திருந்தவர்களுக்கு விரும்பினவற்றைக் கொடுத்தது.

பர்வதம் போன்ற அன்னக் குவியல்களையும், மோர், ரஸம், துவையல் முதலியவற்றையும், பருப்புகளையும், தயிர் வாய்க்கால் களையும், நெய்க் கிணறுகளையும் சர்க்கரைப் பொங்கலையும், கரும்புகளையும், தேன்களையும், பொரிகளையும், கிராமங்களிலும் காடுகளிலும் உள்ள ஓஷதிகளையும், அமிர்தத்திற்கு ஒப்பான உணவுகளையும், பல பக்ஷணங்களையும், லேகியங்களையும், பல வகையான உயர்ந்த ரத்னங்களையும் ஆடைகளையும் மிகுதியாகக் கொடுத்தது.

விஸ்வாமித்ரர், தன் மந்திரிகளோடும், சேனைகளோடும் ஒன்றும் குறைவில்லாத அந்த இனிய வஸ்துகளினால் மிகவும் திருப்தியடைந்தார். சிறந்த அவயவங்களைக் கொண்டதும், அழகிய உருவமுள்ளதும், நல்ல லக்ஷணங்கள் பொருந்தியதும், மனதிற்கு இனியதுமாக இருக்கக் கூடிய அந்த தேனுவைக் கண்ட விஸ்வாமித்ரர், மிகவும் வியப்புற்றார். நந்தினியென்னும் பெயருள்ள அந்தப் பசுவை விரும்பி வஸிஷ்ட மஹரிஷியிடம், ''பத்துக் கோடி பசுக்களை, அல்லது என்னுடைய முழு ராஜ்யத்தையாவது பெற்றுக் கொண்டு, இந்த நந்தினியை எனக்குக் கொடும்'' என்று விஸ்வாமித்ரர் கேட்டார்.

இதைக் கேட்ட வஸிஷ்டர், ''தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் பித்ருக்களுக்கும், எம்மை புரோஹிதராக வைத்து யாகம் செய்பவருக்குமாக இந்த நந்தினி பசு இருக்கிறது. ராஜ்யத்தைக் கொடுத்தாலும் உமக்கு நந்தினியை கொடுக்க முடியாது'' என்றார். விஸ்வாமித்ரரோ, ''பகவானே! இந்தப் பசு மிக உயர்ந்த பொருளாகும். நான் அரசன். உயர்ந்த பொருள்களை அரசன் தான் வைத்துக் கொள்வான். நீர் தவத்தையும் வேதத்யயனத்தையும் ஸதா அனுஷ்டானத்தில் கொண்டிருப்பவர். சாந்தர்களும் மனத்தை அடக்கினவருமான உமக்கு பராக்ரமம் ஏது? என்னுடைய பத்துக் கோடி பசுக்களை வாங்கிக் கொண்டு நான் விரும்பினதை நீர் கொடாவிடில் நான் என் தர்மத்தை விட்டு பசுவை பலாத்காரமாக எடுத்துக் கொண்டு போவேன்'' என்றார்.

ஆனால் வஸிஷ்டரோ, விஸ்வாமித்ரரைப் பார்த்து, ''நீர் சேனையுடன் இருப்பவர்; அரசர்; க்ஷத்ரியர்; கைவன்மையுள்ளவர்; நீர் எவ்வாறு செய்ய விரும்புகிறீரோ அவ்வாறே உடனே செய்யும்; யோசிக்க வேண்டாம்; கவலையும் வேண்டாம்'' என்றார்.

வஸிஷ்டர் இவ்வாறு சொன்னதும், விஸ்வாமித்ரர், ஹம்ஸத்திற்கும் சந்திரனுக்கும் ஒப்பான அந்த தேனுவைப் பலவந்தமாக இழுக்க ஆரம்பித்தார். பிறகு, உத்தம குணமுள்ளதான அந்த வஸிஷ்டருடைய நந்தினி, விஸ்வாமித்ரருடைய படைச் சேவகர்களால் பலாத்காரமாக இழுக்கப்பட்டு கசைகளாலும் தடிகளாலும் அடித்துத் துரத்தப்பட்டது. அதிகமாக அடிக்கப்பட்டபோதும் அது, அந்த ஆஸ்ரமத்தை விட்டுச் செல்லவில்லை. 'அம்மா' என்று கூவிக் கொண்டு பகவானான வஸிஷ்டருக்கு எதிரே வந்து தலை தூக்கி நின்றது.

வஸிஷ்டர், நந்தினியைப் பார்த்து, 'நந்தினியே! உன்னுடைய கதறுகின்ற சப்தத்தைக் கேட்கிறேன். நீ விஸ்வாமித்ரரால் பலவந்தமாக இழுக்கப்படுகிறாய். அதற்கு என்னாற் செய்யக் கூடியது என்ன?'' என்று கேட்டார். நந்தினி, அந்த சேனைகளிடத்தும் விஸ்வாமித்ரரிடத்தும் பயம் உண்டாகி, மிகவும் வருத்தம் அடைந்து வஸிஷ்டரைச் சரணமடைந்து, 'பகவானே! கொடியவனான விஸ்வாமித்ரருடைய சேனையால் கசைகளாலும் தடிகளாலும் அடிக்கப்பட்டு அநாதை போலிருக்கிறேன். என்னைக் கவனியுங்கள்' என்று பிரார்த்தித்தது.

அந்த நிலையிலும் உறுதியான நியமமுள்ள வஸிஷ்ட மாமுனிவர் கலங்கவுமில்லை. தன்னிலை விட்டு நிலை பெயரவும் இல்லை. அவர் நந்தினியை நோக்கி, ''க்ஷத்திரியர்களுக்கு பராக்ரமம் வன்மை. ப்ராம்மணர்களுக்கு பொறுமை வன்மை. பொறுமை என்னை அடைந்திருக்கிறது. ஆதலால், உனக்கு இஷ்டம் இருந்தால் செல்'' என்று சொன்னார். நந்தினியோ அதற்கு, ''பகவானே! ஏன் இப்படி பேசுகிறீர். நான் உம்மால் கைவிடப்பட்டு விட்டேனா! நீர் இருக்கும் போது இவர்கள் எப்படி என்னை பலாத்காரமாக கொண்டு செல்ல முடியும்?'' என்று கதறியது.

வஸிஷ்டர் அதைக் கேட்டு, ''குணமான நந்தினியே! நான் உன்னை கைவிடவில்லை. முடியுமானால் நிற்கலாம்'' என்று சொன்னார். ''நிற்கலாம்'' என்று வஸிஷ்டர் சொன்னதைக் கேட்ட அந்த காமதேனு நிமிர்ந்த தலையும் கழுத்துமுடையதாகவும் கோபமடைந்த பார்வையுடனும் காணப்பட்டது. கோபத்தினால் கண்கள் சிவந்து, ''அம்மா'' என்று உரக்கக் கூவிக் கொண்டு விஸ்வாமித்ரருடைய சேனைகள் எல்லாவற்றையும் துரத்தியது. இன்னும் அதிகக் கோபம் கொண்டு தன் வாலிலிருந்து அதிக நெருப்பு மழையை அடிக்கடி வர்ஷித்தது. சரீரமெல்லாம் ஜொலித்து காமதேனு மத்யான காலத்து சூரியன் போல் பிரகாஸித்தது.

காமதேனு, தன் வாலிலிருந்து பல்கவர் என்னும் ஜாதியினரையும் மடியிலிருந்து திராவிடர்களையும், சுகர்களையும் பின் பக்கத்திலிருந்து யவனர்களையும், சாணத்திலிருந்து பல சபரர்களையும் விலா பக்கத்திலிருந்து பௌண்டரர்களையும், கிராதர், யவனர், ஸிம்ஹலர், பர்ப்பரர், கஸர், சிபுகர், புளிந்தர், சீனர், கேரளர், ஹூதர் என்பவர்களையும் வாய் நுரையிலிருந்து பல மிலேச்சர்களையும் உண்டு பண்ணியது.

அத்தனை பேரும் பல வகையான கவசங்களை அணிந்து ஆயுதங்களை ஏந்தி மிகுந்த கோபத்துடன் விஶ்வாமித்ரருடைய சேனையை ஆக்ரமித்தனர். அத்தனை சேனையும் விஶ்வாமித்ரர் கண் எதிரிலேயே தோற்றது. விஸ்வாமித்ரருடைய சேனை வீரர்கள் உயிர் போக்கப்படாமல் மூன்று யோஜனை தூரம் துரத்தப்பட்டனர்.

இதைப் பார்த்த விஸ்வாமித்ரர், கோபத்தினால் ஆவேசம் கொண்டு சரமாரியாக அம்புகளை வஸிஷ்டர் மீது பொழிந்தார். அவை அனைத்தையும் வஸிஷ்ட மாமுனிவர், மூங்கில் தடியினால் ஒதுக்கினார். இந்த சாமர்த்தியத்தைக் கண்ட விஸ்வாமித்ரர், தன்னிடம் உள்ள அத்தனை திவ்ய அஸ்திரங்களையும் வஸிஷ்டர் மீது பிரயோகித்தார். விஸ்வாமித்ரரின் ஆக்னேயாஸ்திரம், வருணாஸ்திரம், ஐந்திராஸ்திரம், யமாஸ்திரம், வாயுவாஸ்திரம் முதலிய எல்லா அஸ்த்ரங்களையும் வஸிஷ்டர் தன்னுடைய ப்ரம்மதேஜஸின் வன்மையால் சிரித்துக் கொண்டே தண்டத்தினால் தடுத்து நிறுத்தி விட்டார். வஸிஷ்டர், விஸ்வாமித்ரரைப் பார்த்து, ''மஹாராஜாவே! நீ தோற்றாய். இன்னும் ஏதாவது பராக்ரமம் உன்னிடம் இருக்குமானால், அதை காண்பி'' என்று சொன்னார். விஸ்வாமித்ரர் வெட்கம் நிரம்பி, பிரம்ம தேஜஸினால் உண்டான அந்த ஆச்சர்யத்தைக் கண்டு, க்ஷத்ரியனுடைய பராக்ரம தன்மை நிந்திக்கத் தக்கது. ப்ரம்ம தேஜஸின் பலமே பலம். தவ வலிமையே சிறந்தது'' என்று தீர்மானித்து தன் ராஜ்யலக்ஷ்மியை விட்டு, ஸுகங்களை அலஷியம் செய்து, தவத்தில் மனம் வைத்தார். தவத்தினால் ஸித்தியை அடைந்து ஜ்வலிக்கிற தேஜஸ்ஸுடன், ப்ராஹ்மண தன்மையை அடைந்தார். இவ்வாறு 'ராஜ ரிஷி' விஸ்வாமித்ரர், ப்ரம்ம ரிஷியானார்.

---

*நாம் செய்யும் ஆயிரக்கணக்கான தவறுகள் பிறருக்கு தெரிந்துவிடக்கூடாது என்று மிகவும் கவலைப்பட்டு மூடி மறைக்கிறோம். ஆனால் அதே சமயம், நாம் செய்யும் ஓரிரு நல்ல காரியங்களை பிறர் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ச்ரமப்பட்டு ப்ரகடனப்படுத்துகிறோம்.*

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 6

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ
**A. சுந்தரேச ஸர்மா வாஜபேயாஜி**

## பூசம்

இது ப்ருஹஸ்பதியை அதிதேவதையாக கொண்ட உயர்ந்த நக்ஷத்திரம். ஆண் நக்ஷத்திரம் என்று சொல்லப்பட்டுள்ளது. ஒரு சில நக்ஷத்ரங்களுக்கு தனிப் பெருமையை மஹர்ஷிகள் காட்டியுள்ளனர். அவற்றில், ஆபஸ்தம்ப மஹரிஷி.

***"பும்ஸுவனம் வ்யக்தே கர்பே திஷ்யேண"*** என்று ஒரு ஸ்த்ரீக்கு கர்ப்பம் வ்யக்தம் ஆனவுடன் அதாவது மூன்றாவது மாதத்தில், புஷ்ய நக்ஷத்ரத்தில் பும்ஸுவனம் செய்தால் புத்ர ஜனனம் ஏற்படும் என்று கூறியுள்ளார். அன்று, கிழமை, வாரம், யோகம் என எதையும் பரிசீலிக்க வேண்டியதில்லை. இது நிதர்சனம். பூச நக்ஷத்ரத்தை, சித்திரை மாதம் 1-ந் தேதி முதல் 13-ந் தேதி வரை தலைக்கு நேராக மாலையில் புடலம்பூவின் உருவில் நான்கு நக்ஷத்ரங்களால் அடையாளம் காட்டப்படுகிறது. இதன் ஸ்வரூபம், ஸர்வாபரணங்களும் பூண்ட ஒரு மனிதனாக வர்ணிக்கப் படுகிறது.

இந்த நக்ஷத்திர யாகத்திற்கு விசேஷமாக "நீவாரம்" என்ற தான்யத்தில் ஹவிஸை, பாலில் பக்குவம் செய்து யாகம் பண்ண வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. "பில்லரிசி" என தமிழில் கூறுவார்கள். இந்த தான்யம், தேவர்களுக்கு மிகவும் ப்ரீதிகரமானது. பூச நக்ஷத்ரத்து அதிபதி ப்ருஹஸ்பதிக்கு ஒரு பக்கம் ருத்விக்குகளும் ஒரு பக்கம் யஜமானர்களும் இருப்பதாக வர்ணிக்கப்பட்டுள்ளது. அனுஷ்டாதாதாக்களை காப்பாற்றக் கூடிய நக்ஷத்ரம் இது என்று தெரிகிறது.

நக்ஷத்ர யாக மந்த்ரத்தில், "எல்லா திசைகளிலும் எங்களுக்கு க்ஷேமம் ஏற்படட்டும் எங்களுடைய சத்ருக்கள் பாதிப்பை அடையட்டும்; வீர்யத்தை நாங்கள் அடைவோமாக" என்று ப்ரார்த்திக்கப்படுகிறது. கர்மானுஷ்டானத்தால் ஏற்படக் கூடிய தேஜஸ்ஸுக்கு "ப்ரம்மவர்ச்சஸம்" என்று பெயர். அந்த நிஷ்டை, புஷ்ய நக்ஷத்ர யாகத்தால் கிடைக்கிறது.

(தொடர்ச்சி - 14ம் பக்கத்தில்)

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த பதில்கள்

- தொடர்ச்சி

*கேள்வி : புஜிக்கும் உணவுகளினால் நம் மனதானது விகாரப்படும் என்பது எப்படி?*

பதில் : நாம் புஜிக்கும் உணவுகளில் உள்ள அதி சூக்ஷ்மமான பகுதியே நமது மனதாக மாறுகின்றது என்று சாந்தோக்ய உபநிஷத்தில் சொல்லப்பட்டுள்ளது. நாம் உண்ணும் உணவின் ஸ்தூலப்பகுதி, மலமாய் வெளிப்படுகின்றது. நடுப்பகுதி மாமிஸமாய் மாறுகின்றது. ஸூக்ஷ்மப் பகுதியே மனமாக மாறுகின்றது.

*கேள்வி : ஒவ்வொரு வேதத்திலும் பல ஸாகைகள் உண்டா?*

பதில் : ஒவ்வொரு வேதத்திலும் பல ஸாகைகள் உள்ளன. யஜுர் வேதத்தில், நூற்றி ஒன்று ஸாகைகளும், ருக் வேதத்தில் இருபத்தி ஒன்று ஸாகைகளும் ஸாம வேதத்தில் ஆயிரம் ஸாகைகளும் அதர்வண வேதத்தில் 9 ஸாகைகளும் இருந்துள்ளதாக தெரிகின்றது. ஆனால், இவைகளில் சிலவே இன்று வழக்கில் உள்ளன.

*கேள்வி : தர்மத்துடனும், ஆசார அனுஷ்டானங்களுடனும் நித்ய கர்மாக்களை நிஷ்காம்யமாக செய்து அதன் மூலம் சித்த சுத்தியை அடைந்தால்தான் ஞானம் ஏற்படும் என்று சங்கரர், ராமானுஜர், மத்வர் போன்றோரெல்லாம் கூறியிருக்க, இப்பொழுது சிலர் நேரிடையாகவே தியானம், விசாரம் என்று செய்ய ஆரம்பிக்கின்றார்கள். அதில் சிலர் சித்தியும் பெறுகின்றார்கள். எவ்வாறு?*

பதில் : ஒரு சமயம், ரமண மஹரிஷியிடம் ஒருவர் வந்து, ''ஞானம் அடைய பல விதமான தீக்ஷைகள் எல்லாம் தேவை என்று கூறுகிறார்களே, தங்களுக்கு அப்படி எதுவும் இல்லாமல் ஞானம் கை கூடியுள்ளதே'' என்று கேட்டார். அதற்கு பகவான் ரமணர், ''எனக்கு அவைகள் எல்லாம் இல்லை என்று யார் சொன்னது?'' என்று கேட்டார். இதன் பொருள், ஒன்று ஜன்மாந்திரத்தில் அவைகள் எல்லாம் ஆகியிருக்க வேண்டும் என்று கொள்ள வேண்டும். அல்லது நம் ஸ்தூல உலகில் இல்லாமல், சூக்ஷ்ம உலகில் அவை நடைபெற்றிருக்கலாம் என்றும் கொள்ளலாம்.

ஹிரண்ய கசிபு, ராவணன், கம்சன் போன்றவர்களுக்கு பகவானிடம் துவேஷத்தினால் தியானம் சித்தித்தது. நாமும் அப்படி செய்யலாமோ என்றால், நம்மால் முடியாது. பார்த்தால் அல்பம் மாதிரி தெரியும். ஏதாவது உலகில் சிறு கஷ்டம் ஏற்பட்டால் கூட எந்த தெய்வ குற்றமோ, பாகவத அபச்சாரமோ என்று கலங்குகின்றோம். ஏன் என்றால், அவர்கள் துவேஷத்தை அப்யஸிக்கவில்லை, தானாகவே அவர்களுக்குத் துவேஷம் ஸித்தித்தது.

அது போல், ஏற்கனவே பல ஜன்மாக்களில் சிஷ்டாச்சாரத்துடன் இருந்ததன் பலனாகதான் அவர்களுக்கு தியானம் சித்திக்கின்றது. ஸுலபமாக, அப்யாஸம் இல்லாமல் அவர்கள் ஜீவன் முக்தியை அடைகின்றார்கள். அப்படி பூர்வ ஜன்மாவில் அனுஷ்டானம் இல்லாமல் நேரிடையாக தியானத்தை அப்யஸித்தால் பலன் பலருக்கு ஏற்படுவதில்லை என்பதே யதார்த்தம். ஆகவேதான் பலர், ''நான் பல நாள் தியானம் செய்தும் பலன் ஒன்றும் ஏற்படவில்லை'' என்று கூறுகின்றார்கள்.

*கேள்வி : பிரும்மச்சாரியின் தருமங்களாக சாஸ்திரங்களில் கூறியிருப்பவை எவை?*

பதில் : ப்ராம்மண ப்ரம்மச்சாரி, நித்யம் ஸமிதா தானம் செய்து அக்னியை உபாஸிக்க வேண்டும். பிக்ஷையெடுத்த பின், எடுத்த பிக்ஷையை குருவினிடம் காட்டிய பிறகே உண்ண வேண்டும். ஸந்த்யாவந்தனத்தை, ஒரு காலமும் விடாமல் செய்ய வேண்டும். எப்பொழுதும் சத்தியத்தையே உயிர் மூச்சாகக் கொள்ள வேண்டும். சூரியோதயத்தை பார்த்தல் கூடாது. தேன், மாமிசம் இவைகளை ஒருக்காலும் புஜிக்கக் கூடாது. சந்தனம் பூசிக் கொள்ளக் கூடாது. மாலை அணிந்து கொள்ளுவதை விலக்க வேண்டும். பிறருடைய குற்றங்களை ஒருக்காலும் கூறுதல் கூடாது. குருவிற்கு எதிரில் கால் நீட்டுதல் கூடாது.

முழங்காலை சுற்றியும் கழுத்தை சுற்றியும் ஆடை அணிதல் குருவிற்கு முன் தவிர்க்க வேண்டும். பெண்களை உற்று நோக்குதல் கூடாது. நெருங்கி பேசுதலும் கூடாது. சூதாட்டம், பர ஹிம்ஸை, கள், கடுஞ்சொல் இவைகள் ஒருக்காலும் கூடாது. குரு, மற்றும் பூஜிக்க தகுந்த பெரியோர்களின் பெயர்களை கூறுதல் ஆகாது. கூற வேண்டியிருப்பின் மிகுந்த மரியாதையுடனும், வணக்கத்துடனும் கூற வேண்டும். தம்மை ஏதாவது குரு வினவினால், அவர் முன்னர் சென்று விடையளிக்க வேண்டும். அவருடன் செல்லும்பொழுது அவருக்குப் பின்னர்தான் செல்ல வேண்டும். படி என்று உத்திரவு வந்த பிறகே, படிக்க வேண்டும். குருவிற்கு ஒருக்காலும் தீங்கு

இழைக்காமலும் நன்மையைப் புரிந்து கொண்டும் இருக்க வேண்டும். இதுவே ப்ரம்மச்சாரி கடைப் பிடிக்க வேண்டியவைகளாக நம் சாஸ்திரங்களில் கூறியுள்ளன.

*கேள்வி : ஏன் தெற்கு பார்த்து நமஸ்கரித்தல் கூடாது?*

பதில் : கிழக்கு திக்கு தேவர்களை குறிக்கும். மேற்கு திக்கு மனுஷ்யர்களை குறிக்கும். வடக்கு திக்கு ருத்திரர்களை குறிக்கும். தெற்கு திக்கு பித்ருக்களை குறிக்கும். தெற்கு திக்கில் பித்ருக்கள் வாஸம் செய்வதால் சில காலங்களைத் (அபர கார்ய காலங்களை) தவிர அந்தத் திக்கில் நமஸ்கரிக்கக் கூடாது.

---

11-ம் பக்கத் தொடர்ச்சி

பூச நக்ஷத்ரத்தில் ஜனித்தவர்கள், காம க்ரோதங்கள் இல்லாதவர்களாகவும், சாந்தமான ஸ்வபாவம் உடையவர்களாகவும் இருப்பார்கள். எல்லோரிடமும் ப்ரியமாக இருப்பர். புத்திசாலியாகவும், ஐச்வர்யம் உள்ளவர்களாகவும், தர்மங்களில் ஈடுபடக் கூடியவர்களாகவும் இருப்பர். ஜலம், தோட்டம் இவற்றில் ப்ரீதி அதிகமாக இருக்கும். பெண்களிடத்தில் தோற்றுப் போவர். சிலர் கோணலான நடை உடையவர்களாக இருப்பர். ஸ்நேஹிதர்கள் இவர்களுக்கு நிறைய உண்டு. எந்த விஷயத்தையும் உடனே க்ரஹிக்கக் கூடிய சக்தி இவர்களுக்கு உண்டு. தனக்கே உரித்தான பாணியில் கரடு முரடான ஆசாமிகளைக் கூட தன் வசப்படுத்தி விடுவார்கள். இவ்வளவு நற்குணங்கள் படைத்த இவர்கள், சனி க்ரஹத்தின் ஆதிக்கம் பெற்ற நக்ஷத்ரவான்களாக இருப்பதால் சுறுசுறுப்பு குறைவு. தூக்கம் சற்று அதிகம். சில ஸமயங்களில் மூர்க்கத்தனமாக செயல்படுவார்கள்.

ஆஞ்சனேய ஸ்வாமியை உபாஸிப்பதால் இந்த குறைகள் நீங்கும். பல ஆக்க பூர்வமான கார்யங்களை இவர்கள் செய்வார்கள். அலங்காரத்தில் மிகவும் நாட்டம் கொண்டு தன்னை அலங்கரித்துக் கொள்வர். ஒரு கார்யம் ஆகவேண்டும் என்றால், சத்ருவாக இருந்தாலும் அவனிடம் சென்று கார்யத்தை ஸாதிக்கும் திறமை இவர்களிடம் உண்டு. பூச நக்ஷத்ரக்காரர்களது ஸ்நேஹத்தை நாம் வைத்துக் கொண்டு பல கார்யங்களை ஸாதித்துக் கொள்ளலாம். □

# பாவ லோகத்தில் ஸஞ்சாரம்-6

ஸ்ரீ வனம். யமுனை நதி தீரம். க்ருஹத்தில் வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு நான், சிறிது நேரம் யமுனையின் அழகை ரஸிக்கலாமே என்று வந்து அமர்ந்திருந்தேன். சிறிது நேரத்தில், என்னுடைய ஸகிகள் சித்ரா, சம்பகலதா, துங்கவித்யா, ஸுதேவி, சந்த்ராவளி, ரங்கதேவி எல்லோரும் ஒவ்வொருவராக வந்து என் கூட சேர்ந்து விட்டார்கள். நாங்கள் அனைவரும் சேர்ந்துவிட்டால், எப்பொழுதும் போல், கண்ணனைப் பற்றியே எங்கள் பேச்சு இருந்தது என்பதை நான் சொல்லவும் வேண்டுமா!

அன்று, எங்களுடன் ராஸம் செய்துவிட்டு பிரிந்த கண்ணனை அடைவதற்கு, நாங்கள் அனைவரும் பாடிய கோபிகா கீதத்தை மறுபடியும் ஒரு முறை எல்லோரும் ஸுஸ்வரத்துடன் பாடினோம். பாடுவது மட்டும் அல்லாமல் நடுநடுவே ரஸமான **பாவங்களை** ஒருவருக்கொருவர் எடுத்துக் கூறி ஆனந்தமடைந்தோம்.

*''சிரஸி தேஹிநாம் ஸ்ரீ கரக்ரஹம்''* என்றால் என்ன அர்த்தம் என்று நாங்கள் எல்லோரும் கூடி விவாதித்தோம். உலகத்தில் எல்லோரும், ''கண்ணனின் மங்களகரமான கரத்தை (ஸ்ரீ கரம்) சிரஸில் தொடச் சொல்லி கோபிகைகள் ப்ரார்த்தித்தார்கள்'' என்று தான் நினைப்பார்கள். ஆனால் நாங்களோ, க்ருஷ்ணா, ''நீ ராதையைத் தொட்ட கையை, உடனே எங்கள் தலையில் தொட வேண்டும்'' என்பதற்காகவே ப்ரார்த்தித்தோம். எங்களைப் பொருத்தவரை ''ஸ்ரீ கரம்'' என்பதற்கு இது தான் அர்த்தம். இப்படியாக ராஸிக்யமாக குதூஹலமாக நாங்கள் பாடியும், பேசியும் கொண்டிருந்தோம்.

அப்பொழுது, எனக்கு பின்னாடி மெதுவாக வந்து ஒருவர் என் கண்களை பொத்தினார். என் காதருகே நெருங்கி, ''நான் யார் என்று கூறு பார்க்கலாம்'' என்று கூறினார். என் பக்கத்தில் இருப்பவர்களிடம், ''ஒருவரும் நான் யார் என்பதை சொல்ல வேண்டாம்'' என்றும் கூறினார். இப்படியெல்லாம் செய்தால் என்னால் கண்டு பிடிக்க முடியாதா என்ன? அந்த கைவிரல்களின் ஸ்பரிசமும், மதுரமான குரலும், அவரிடமிருந்து வந்த ஸுகந்தமும் வந்தது ஷ்யாம ஸுந்தரன் என்பதைச் சொல்லாமல் சொல்லி விட்டது.



ஆனாலும், நான் வேண்டுமென்றே தெரியாதது போல் நடிக்க, அவன் தன் கையை எடுத்துவிட்டு எங்கள் முன் ஓடி வந்து அமர்ந்து கொண்டான். மதுரமுரளீதரன், தன்னுடைய ப்ரேம வசனங்களால் எங்களை சுகப்படுத்தினான்.

கண்ணன் என்னைப் பார்த்து, "லலிதா! நீயும் எவ்வளவோ நாட்களாக உங்கள் க்ருஹத்திற்கு அழைக்கின்றாய். அவச்யம் தீபாவளி அன்று வருகின்றேன்" என்று அவனாகவே கூறினான். தனக்கு ஒன்றும் தெரியாதது போல், "உன் க்ருஹம் எங்குள்ளது? எவ்வளவு தூரம்?" என்றெல்லாம் வினவினான். "கண்டிப்பாக வருவாய் அல்லவா? ஏமாற்ற மாட்டாய் அல்லவா!" என்று நான் பல முறை கேட்டேன். "நிச்சயம் வருகின்றேன்" என்றான். "முதல் நாள் இரவே வந்து விடுவாயா" என்று ஆவல் மேலோங்கக் கேட்டேன். "முடிந்த வரையில் வரப் பார்க்கிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான். நாங்களும் சந்தோஷமாக வீடு திரும்பினோம்.

தீபாவளி நாளை நான் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். "நாட்கள் மிகவும் வேகமாக ஓடாதா? ஏன் இவ்வளவு மெதுவாக ஓடுகின்றது" என்று காலத்தின் மேல் கடுங்கோபமாய் வந்தது. "கண்ணன் வந்தால் இரவில் எங்கு படுத்துக் கொள்வான்; எங்கு அமருவான், எங்கு அமர்ந்து சாப்பிடுவான்" என்று பலவாறு யோசித்து ஒவ்வொரு இடத்தையும் மிகவும் அழகாக அலங்கரித்து வைத்தேன். "அவன் என்னவெல்லாம் சாப்பிடுவான்? அவனுக்கு மிகவும் பிடித்தது என்ன?" என்று யோசித்து பல வகையான பக்ஷணங்கள் செய்ய ஆரம்பித்தேன். என்னுடைய ஸகி அப்பொழுது என்னிடம் வந்து, 'கண்ணன் இத்துணை பக்ஷணங்களையுமா சாப்பிடப் போகின்றான்!' என்று கேட்டாள். அதற்கு நான் "பரவாயில்லையடி; அவன் ஒன்று கேட்டு, அது இல்லை என்று இருக்கக் கூடாது" என்று கூறினேன். அவன் முதல் நாள் இரவு வந்தால் அவனுடைய கைகளுக்கு மருதாணியும், கால்களுக்கு நலங்கும் இட்டுவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். அழகாக, மயில்கண் வேஷ்டியும் மஞ்சள் பீதாம்பரமும் வாங்கி வைத்திருந்தேன்.

தோட்டத்தில் உள்ள புஷ்பச் செடிகளையும், துளஸிச் செடி களையும் பார்த்து, "நீங்கள் க்ருதார்த்தம் அடைந்து விட்டீர்கள். கண்ணன் பாதத்தில் நீங்கள் புஷ்பிக்கும் புஷ்பங்களை எல்லாம் சேர்க்கப் போகின்றேன்" என்று பேசினேன். எனக்கு நானே ஏதேதோ பேசிக்

கொண்டிருந்தேன். என்னுடைய கால்கள் தரையிலேயே இல்லை. எனக்கு தூக்கமும் வரவில்லை. ஆகாரமும் செல்லவில்லை.

என்னை நானே பலவிதமாக அலங்காரம் செய்து கொண்டு பலமுறை கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் அவன் வரும் செய்தியைச் சொல்லலாமா? வேண்டாம், வேண்டாம். ஒருக்கால், வழக்கம் போலவே ஏமாற்றிவிட்டால் நமக்கு அவமானம். இதில் அவமானம் என்ன இருக்கிறது? அவனுடைய ஸ்வபாவம் தான் உலகம் அறிந்ததாயிற்றே! மேலும், அவன் வருவானா, வரமாட்டானா என்பதில் நமக்கே ஒரு சந்தேகம் இருப்பதால்தான் அவன் பல நேரங்களில் வருவதில்லை போலும்.

ஒருக்கால், நம்முடன் தனியாக ஏதாவது பேச விரும்பினால் பலர் கூடியிருப்பது அதற்குத் தடையாக இருக்குமே, அதனால் கூப்பிட வேண்டாம் என்று தோன்றிற்று. அவன் நம்முடன் ஏதாவது பேச வேண்டுமானால் வாயைத் திறந்துதான் பேச வேண்டுமா என்ன! அதற்கு அவச்யமே இல்லை, அவன் கண்களுடன் பேசும் கலையறிந்தவன். ஹ்ருதயத்துடன் பேசும் ப்ராணவல்லபன். இப்படியாக நானே பலவாறு எனக்குள்ளேயே பேசிக் கொண்டேன். அவனுக்கு பாத பூஜை, பாத ஸேவை எல்லாம் செய்ய வேண்டும். அதை மறந்து விடக்கூடாது என்று நானே எனக்குள், அவன் வரும் பொழுது செய்ய வேண்டிய எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டேன். நாள் நெருங்க நெருங்க, பல முறை என் கற்பனைகளில் கண்ணன் வந்துச் சென்றான்.

தீபாவளியின் முதல் நாளும் வந்தது. அவன் வருவான், வருவான் என்று அவன் வரும் திக்கை எதிர்பார்த்து காத்து கொண்டிருந்து என் கண்களும் வலிக்க ஆரம்பித்து விட்டது. இதற்குள், பலர் வேறு, ''கண்ணன் வந்துவிட்டானா'' என்று விசாரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்களிடம் எல்லாம், 'காலையில் வருவான்' என்று சொல்லி சமாளித்துக் கொண்டே வந்தேன். இரவு முழுவதும் தூக்கம் இல்லை.

பொழுதும் விடிந்தது, கண்ணன் வரவும் காணோம். சாப்பாடு நேரமும் கடந்தது, மாலை பொழுதும் வந்தது. என்னால் துக்கத்தைத் தாங்கவே முடியவில்லை. கோபம் கோபமாக வந்தது. இவனை யார் அழைத்தார்கள்? அவனாக அல்லவா 'வரேன்' என்று சொன்னான். இனி வரமாட்டானா? ஒருக்கால் வந்தால், அவனை ஒரு பிடி பிடித்து விடவேண்டும் என்று காத்திருந்தேன்.

இரவு 9 மணி அளவில் யாரோ கதவைத் தட்டினார்கள். திறந்தால் யார்? சாக்ஷாத் கண்ணன்தான். நாம், வருவான் என்று எதிர்பார்த்திருந்த போது வரவில்லை. எப்பொழுது வரமாட்டான் என்று நினைத்திருந் தேனோ அப்பொழுது வந்து நிற்கின்றான். அது இல்லை ஆச்சர்யம். அவன் முகத்தைப் பார்த்தவுடன் என் கோபம் எங்கே போயிற்று? ஏன் என்னால் அவனிடம் கோபம் கொள்ள முடியவில்லை? அதற்கும் மேலுமாக அவனைப் பார்த்தவுடன் மிகவும் பாபம் என்று வேறு தோன்றி விட்டது. மிகவும் களைத்திருந்தான். சாப்பிட வாயேன் என்று கூப்பிட்டேன். ஒரு குவளை மோர் மட்டும் போதும் என்று கூறி ஆயாசத்துடன் கட்டிலில் படுத்து உறங்கி விட்டான். உறங்கும்பொழுது கூட இவ்வளவு அழகா? இதுதான் பெருமாளின் யோக சயனமோ? அவன் தூங்கும் அழகையே பார்த்துக் கொண்டிருந்தேன். அதுவே எனக்கு த்யானமாயிற்று.

காலை எழுந்தவுடன், 'லலிதா தவறாக நினைக்காதே, எனக்கு அநேக அவசரமான கார்யங்கள் உள்ளன. மற்றொரு நாள் ஸாவகாசமாக தங்குவது போல் வருகின்றேன் என்றான். இல்லை கண்ணா, என்றேன். ஏன் என் மேல் கோபமா? என்றான்.

இல்லை கண்ணா, உனக்கோ எவ்வளவோ பக்தர்கள். எவ்வளவோ கார்யம். யார் எது கூறினாலும் அதை அப்படியே நம்பி எல்லோருடைய இழுப்புக்கும் நீ ஈடு கொடுக்கின்றாய். நானும் உன்னை. மற்றவர்கள் போல் தொந்தரவு செய்யப் போவதில்லை. என்னுடைய ஹ்ருதயத்தில் உள்ள கண்ணன் நித்யம் என்னுடன் பேசுகின்றான், விளையாடுகின்றான். நான் கொடுப்பதை உண்கின்றான். பாத பூஜை, சேவைகளை ஏற்று கொள்கின்றான். அவன் என்னை பல விதத்தில் சுகப்படுத்துகின்றான். அந்த நீயே எனக்கு போதும். உன்னை யார் வேண்டுமானாலும் சொந்தம் கொண்டாடிக் கொள்ளட்டும். எனக்குக் கவலையில்லை என்று கூறிவிட்டு என் வேலைகளைத் தொடர்ந்தேன். □

---

1998 ஜனவரி 8-ந் தேதி வைகுண்ட ஏகாதஸீ - பரமபத வாசல் திறப்பு.

# வேத கதைகள் - 7

- தர்மக்ஞர், வான்முக பௌர்வபௌமம்,
மேலக்காவிரி பஞ்சாபகேச சாஸ்திரிகள்

முன்னொரு சமயம், நான்முகன் பல பிள்ளைகளைப் படைத்தார். படைத்த அந்த பிள்ளைகள் அவரைவிட்டு விலகின. நான்முகனுக்கோ அந்த பிள்ளைகளுடன் சேரவேண்டும் என்ற அவா இருந்தது. உடனே, ''ஏ பிள்ளைகளே!'' என்று உரக்க அழைத்தார். பத்து தடவை அழைத்த பிறகு ஒரு பிள்ளை வந்தான். அவனுக்கு *தசஹோதா* என்ற பெயர் ஏறபட்டது. தசஹூதன் என்றால் பத்து தடவை அழைக்கப்பட்டவன் என்று பொருள்படும். அதனால் பத்து தடவை அழைக்கப்பட்ட பிள்ளைக்கு தசஹூதன் என்ற பெயர்தான் ஏற்பட வேண்டும். ஆனால், வேதத்தில் தசஹோதா என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. அதற்குள்ள காரணத்தை, வேதமே கூறுகிறது.

பெரியோர்களின் பெயரைச் சொல்லி நேர்முகமாக நாம் அழைப்பது கூடாது. அப்படி அழைத்தால், அவர்களை அவமானப் படுத்துவதாகும். ஆதலால்தான், நெருங்கிய உறவினர்களை, பெயர் சொல்லி கூறாமல், தாய், தந்தை, மாமன் என்று உறவை வைத்து அழைக்கிறோம். தேவர்களுக்கும் மறைமுகமாக அழைத்தால்தான் மகிழ்ச்சி ஏற்படுகிறது. அதன்படிதான், பத்து தடவை அழைக்கப் பட்டவனை தசஹூதன் என்று அழைப்பதற்கு பதிலாக தசஹோதா என்று வேதம் கூறுகிறது.

மறுபடியும் ப்ரஹ்மா, ''பிள்ளைகளே'' என்று அழைத்தார். ஏழு தடவை அழைத்த பிறகு மற்றொரு பிள்ளை வந்தான். அவனுக்கு *ஸப்தஹோதா* என்ற பெயர் ஏற்பட்டது. முன் போல் உள்ள காரணத்தினால், ஸப்தஹூதன் என்று அழைக்கப்படாமல் ஸப்தஹோதா என்று வேதம் அழைக்கிறது. மறுபடியும் ப்ரஹ்மா, ''பிள்ளைகளே'' என்று அழைத்தார். ஆறு தடவை அழைத்தபிறகு இன்னொரு பிள்ளை ப்ரஹ்மாவிடம் வந்தான். அவனுக்கு ஷட்ஹோதா என்று பெயர் ஏற்பட்டது. பிறகு ''பிள்ளைகளே'' என்று ஐந்து தடவை அழைத்தார் ப்ரஹ்மா. மற்றொரு பிள்ளை வந்தான். அவனுக்கு பஞ்சஹோதா என்று பெயர் ஏற்பட்டது.

ப்ரஹ்மா, ''பிள்ளைகளே'' என்று மறுபடியும் நான்கு முறை அழைக்க, ஒரு பிள்ளை வந்தான். அவனுக்கு *சதுர்ஹோதா* என்ற பெயர் ஏற்பட்டது. அவன் சீக்கிரம் வந்ததால் மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் அவன் உயர்ந்தவனாகிறான். ஆதலால், வேதமானது தசஹோதா, சப்தஹோதா, ஷட்ஹோதா, பஞ்சஹோதா, சதுர்ஹோதா என்ற யாவரையும் ''சதுர்ஹோதா'' என்றே பெயரிட்டு அழைத்தது.

அவனைப்பார்த்து ப்ரஹ்மா, ''நீ ஒருவன்தான் சீக்கிரம் அழைத்தவுடன் வந்தவன். ஆதலால் உன் பெயரே மற்ற அனைவருக்கும் ஏற்படட்டும் என்று சதுர்ஹோதாவிற்கு தனிப்பட்ட பெருமையை அளித்தார். ஆதலால்தான், ஒரு பெற்றோருக்கு பல பிள்ளைகள் இருந்து, எந்த பிள்ளை பெற்றோர்க்கு பணிவிடை செய்கின்றானோ அவன்தான் பெற்றோர்கள் மனதைக் கவர்ந்தவன் ஆகிறான். பெற்றோர்களுக்கு பணிவிடை செய்பவன் பகவானுக்கு நெருங்கியவனாகிறான். பகவான் அவனுக்குத் தானாகவே தரிசனம் அளிக்கிறான்.

வேதத்தில் உள்ள இந்த கதைக்கு ப்ரமாணமாக, பண்டரீபுரத்தில் பாண்டுரங்கன் புண்டலீகனுக்காக ப்ரத்யக்ஷமாகி தரிசனம் தந்ததாக இருக்கிறது.

புண்டலீகன், பெற்றோர்களுக்கு பணிவிடை செய்து வந்தான். இதனால் மகிழ்ந்த பகவான், தானாகவே அவனுக்கு தரிசனம் தந்தான். பகவானின் தரிசனத்தையும் பார்க்காமல் புண்டலீகன் பெற்றோர்களுக்கு ஸ்நானம் செய்வித்துக் கொண்டிருந்தான். எங்கும் ஈரமாக இருந்ததால், பகவான் ஈரத்தில் நிற்க வேண்டாம் என்று ஒரு செங்கல்லை பகவானுக்கு ஆசனமாக அளித்தான். பகவான் அதில் நின்று தன் இரு கைகளையும் தன் இடுப்பில் வைத்து பாண்டுரங்கனாக அங்கேயே தங்கி விட்டான்.

இந்தக் கதையால், மனிதனாக பிறந்தவன், தெய்வ பக்தி செய்யாவிடினும் பெற்றோர்களுக்கு பணிவிடை செய்வதால் பகவான் தானாகவே வந்து அருள் புரிகிறான். பகவானிடம் பக்தி செய்தால், நாம் பகவானைத் தேடிப் போகவேண்டும். பெற்றோர்களுக்கு பணிவிடை செய்வதால், பகவான் நம்மை நோக்கி வருகிறான். மாத்ரு-பித்ரு பக்தியின் உயர்வு, இதனால் நமக்குப் புலப்படுகிறது. □

# ஸ்ரீ துளஸீயின் பெருமை

ஸ்ரீ மஹாபாரதத்தில் துளஸீயின் பெருமையைப் பற்றிச் சொல்லும் பொழுது,

*புண்டரீக ஸஹஸ்ராத்து துலஸீ குணதோSதிகா ।*
*புஷ்பலீபாவே துலஸ்யாஸ்து பத்ரை: மாம் அர்ச்யேத் புந: ॥*
*பத்ராSலாபே - து ஶாகாபி: ஶாகாSபாவே சிபாலவை: ।*
*சிபாSபாவே ம்ருதா தத்ர பக்தி மா அர்ச்சயேத மாம் ॥*

ஸ்ரீ கிருஷ்ண பூஜையில், ஆயிரம் தாமரைகளை விட, ஒரு துளஸீயானது அதிகமான குணத்தையுடையது. ஸ்ரீ கிருஷ்ண பூஜை துளஸீ புஷ்பத்தினால் செய்யப்பட வேண்டும். துளஸீ புஷ்பம் இல்லாத பொழுது, துளஸீ தளங்களால் பூஜை செய்ய வேண்டும். துளஸீ பத்ரங்கள் இல்லாத பொழுது துளஸீ கிளைகளினால் பூஜை செய்ய வேண்டும். அது இல்லாத பொழுது துளஸீயின் சிறியதான நுனி கிளைகளினால் பூஜை செய்ய வேண்டும். அதுவும் இல்லாத பொழுது துளஸீயின் வேர் இருந்த மண்ணினால் பூஜை செய்ய வேண்டும்.

''கிருஷ்ண பக்தன், என்னை துளஸீ சம்பந்தத்துடன் அர்ச்சனை செய்ய வேண்டும். பூஜை செய்ய வேண்டும்'' என்று பகவான் கிருஷ்ணன் கூறுகிறார்.

மற்றொரு இடத்தில் துளஸீயின் பெருமையைக் கூறும்பொழுது 'துளஸீ ஸப்த முச்யதே' என்று சொல்கிறார். அதாவது துளஸீ என்று சொல்வதே போதுமானது. துளஸீயைத் தவிர வேறு எந்த புஷ்பத்தினால் அர்ச்சனை செய்தாலும் ''துளஸீ பத்ரம் ஸமர்ப்பயாமி'' என்று சொல்லி அர்ப்பிக்க வேண்டும் என்று சொல்கிறார்.

இதனால் துளஸீயின் பெருமையை அறிந்து ஸ்ரீ கிருஷ்ணனை பூஜிப்போம்.

**- T. கண்ணன் தீக்ஷிதர்**

# வேணுகானம் ப்ரஹ்மஸ்ரீ ஸரப ஸாஸ்திரிகள்

**- வாழ்க்கை வரலாறு**

நமது பாரத நாட்டிலே, நம் முன்னோர்கள் நமக்கு அளித்துள்ள கலைகள் ஆயகலை 64 என்பதாகும். நமது கர்நாடக சங்கீதத்தில் கையாளப்படும் இசைக் கருவிகளுள் வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் இவை மூன்றும் தனிச் சிறப்பு வாய்ந்தவை எனலாம். வேணுகானம் 24-வது கலையைச் சேர்ந்தது. புராண ரீதியாக, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வேணுகானம் செய்ததை அறிகிறோம். எனினும், காலப்போக்கில் புல்லாங்குழல் தனது தனித்தன்மையை இழந்து, நாட்டிய நிகழ்ச்சிகளில் ஒரு பக்க வாத்தியமாகவே விளங்கி வரலாயிற்று. பிற்காலத்தில், முழு நேரக் கச்சேரிகளில் அதற்கு முக்கிய ஸ்தானத்தை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை, ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அவதாரம் என்று போற்றப்பட்ட வேணுகானம் ஸ்ரீ ஸரப சாஸ்திரிகள் அவர்களையே சாரும்.

தஞ்சை ஜில்லாவில், கும்பகோணத்தில், சோலையப்ப முதலித் தெருவில், ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகளுக்கும் தர்மாம்பாள் அவர்களுக்கும் 1872-ம் ஆண்டில் இரண்டாவது குமாரராக ஸ்ரீ ஸரப ஸாஸ்திரிகள் தோன்றினார். அவரது இயற்பெயர் ஸ்ரீ ராமச்சந்திரன். ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகள், வேத சாஸ்திரங்களில் பெரிய பண்டிதராகவும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் வித்வானாகவும் இருந்தவர். ஸ்ரீ விஸ்வநாத சாஸ்திரிகளின் மூத்த குமாரர் ஸ்ரீ சிவகுமார் சாஸ்திரிகள், கும்பகோணம் காலேஜில் பெரிய வேலையில் இருந்து ஓய்வு பெற்றவர்.

குழந்தைப் பருவத்தில் ஸரப ஸாஸ்திரிகளுக்கு ஏற்பட்ட ஒரு கண் நோய் காரணமாக அவரது இரண்டாவது வயதிலேயே கண் பார்வையை இழக்கும்படி நேரிட்டது. வைத்தியம் செய்தும் பலனளிக்காமல் போகவே, செய்வதறியாது சிந்தித்து, பின் தனது குமாரனுக்கு சங்கீதம் பயிற்றுவிப்பது என்ற முடிவிற்கு வந்தார் அவர் தந்தை. ஒரு நாள், தனது வீட்டுத் தோட்டத்திலிருந்த ஒரு சிறு மூங்கிலை வெட்டி எடுத்து, அதற்கு துளைகள் போட்டு, அதை ஒரு புல்லாங்குழலாக உருவாக்கி, அதைத் தனயனிடம் கொடுத்தார். அதைக் கையில் வாங்கிய ஸரப ஸாஸ்திரிகள் வாயில் வைத்து இசைக்க முற்பட்டவுடன், அதனின்று ஒரு தெய்வீக ஒலி வெளிப்பட்டதைக் கேட்ட தந்தையின் உள்ளம் குளிர்ந்ததுடன் அன்று

முதல் அவருக்கு முறைப்படி சங்கீதம் போதிக்கவும் ஏற்பாடு செய்தார். அப்போது ஸரப ஸாஸ்திரிகளுக்கு சுமார் பத்து வயது இருக்கும்.

ஒரு ஸமயம், சரப ஸாஸ்த்ரிகளின் எதிர்வீட்டில் இருக்கும் வயது முதிர்ந்தவர், சிறியவராக இருக்கும் ஸரப ஸாஸ்த்ரிகள் பாதத்தில் விழுந்து பல மரியாதைகளை ஸமர்ப்பித்தார். அதைப் பார்த்த ஸரப ஸாஸ்த்ரிகள் 'இதெல்லாம் எதற்கு!' என்று கேட்டார். வயதானவர் அவரிடம், ''நீங்கள் எனக்கு குரு ஸ்தானம். தினமும், நீங்கள் உங்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து வேதத்யயனம் செய்வீர்கள். உங்களின் ''வேத கனம்'' கேட்டு கேட்டு எனக்கு வேதம் முழுக்க மனனமாகிவிட்டது'' என்றார். ஸரப ஸாஸ்திரிகள் அவரைப்பார்த்து, ''வேதத்தைச் சொல்லுங்கள்'' என்று கேட்க, முழு வேதத்தையும் சொன்னார். இப்படி சிறந்த வேத விற்பன்னராக விளங்கி வந்தார் ஸரப ஸாஸ்த்ரிகள்.

விஸ்வநாத ஸாஸ்திரிகள் காலகதியான பிறகு அவரது துணைவியார் தர்மாம்பாள் தனது இரு இளம் குமாரர்களுடன் திருவையாறு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் இல்லத்திற்கு அடுத்தாற்போல் வசித்துவந்த தனது சகோதரன் வீட்டில் வந்து தங்கினார். தர்மாம்பாளின் மற்றொரு சகோதரரும் தியாகராஜ ஸ்வாமிகளின் அன்பிற்குப் பாத்திரமானவருமான ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யர், ஸரப ஸாஸ்திரிகளுக்கு சங்கீதம் கற்பிக்கலானார். பிறகு ஸரப ஸாஸ்திரிகள், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் நெருங்கிய உறவினரும், முக்கிய சீடர்களில் ஒருவருமான மானம்புச்சாவடி வெங்கட சுப்பய்யரிடம் இசை பயிலலானார்.

இசை உலகிற்கு மானம்புச்சாவடி வெங்கடசுப்பய்யர் அளித்த ஐந்து ரத்னங்களான சீடர்களில் ஸரப ஸாஸ்திரிகள் ஒருவர். மகா வைத்யநாத சிவன், பட்டணம் சுப்பிரமணிய ஐயா, தியாகராஜ சுவாமிகளின் பெண் வயிற்றுப் பேரரான தியாகராஜா மற்றும் பிடில் வெங்கோபராவ் ஆகியவர்கள் ஏனைய சீடர்கள் புல்லாங்குழல் வாத்தியத்தின் நெளிவு சுளிவுகளை, ஸரப ஸாஸ்திரிகளுக்கு விளக்கி வழி காட்டியவர் கோவிந்த நாயணக்காரர் என்னும் நாதஸ்வர வித்வான் ஆவார்.

மேலும், பல்லவி நாராயண ஸ்வாமி அய்யர், நாடியம் ராமு ஐயர் போன்ற பெரிய வித்வான்களும் இவருடைய ஞானத்தைப் புரிந்து கொண்டு இந்த வாத்தியத்தில் விபரங்களை சொல்லிக்கொடுத்து வழிகாட்டியாக இருந்தார்கள். மேலும், சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் சிஷ்யர்களான உமையாள்புரம் ஸ்ரீ கிருஷ்ண பாகவதர், ஸ்ரீ சுந்தர பாகவதர் ஆகிய சகோதரர்களில் ஸ்ரீ சுந்தர பாகவதரிடம், ஸ்ரீ ஸரப

ஸாஸ்திரிகள் தியாகராஜ சுவாமியின் அநேக கிருதிகளை பாடம் செய்ததாகவும் கூறுவர். அவர் நடத்தும் தியாகராஜ ஆராதனையின் போது ஸ்ரீ ஸரப ஸாஸ்திரிகளின் கச்சேரியுடன் ஆரம்பமாகும் என்பது கவனிக்கத்தக்கது. ஸரப ஸாஸ்திரிகள் உரிய காலத்தில் அம்பு அம்மாள் என்னும் பெண்மணியை மணந்தார்.

ஸரப ஸாஸ்திரிகளுக்கு இனிமையான சாரீரம், மேலும், வயலின், மிருதங்கம் இவைகளை வாசிப்பதிலும், கச்சேரிகளில் பங்கு கொள்ளும் அளவிற்கு தேர்ச்சி பெற்றிருந்தார். அத்துடன் வடமொழி, தெலுங்கு, தமிழ், மராத்தி, முதலிய மொழிகளில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். வட மொழியில் சாகித்யங்களை இயற்றியதோடு அம்மொழியில் சரளமாக சம்பாஷிக்கும் ஆற்றலும் பெற்றிருந்தார்.

நாளடைவில், ஸரப ஸாஸ்திரிகள் இசை உலகில் தனக்கென ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொண்டு, ஒரு சிகரமாக விளங்கினார். கர்நாடக இசையில் இவரது பாண்டித்யம் விவரிக்கத்தரமன்று. சிறந்த கற்பனை வளம் பொருந்திய வாசிப்பு சூழலில் சுருதிகளை இசைக்கும்போது வெறும் மெட்டுகளின் அடிப்படையில் மட்டும் வாசிக்காமல், ஸாகித்யமாகவே வாசிப்பார். அத்துடன் விரலடிகள் வியக்கத்தக்க வகையில் அமைந்திருக்கும்.

ஸாஸ்திரிகள் அவர்களின் ஸம காலத்தவர்களான பழனி கடம் கிருஷ்ணய்யர், புதுக்கோட்டை மான் பூண்டியாப்பிள்ளை, தக்ஷிணா மூர்த்தி பிள்ளை, திருவையாறு சுப்ரமண்ய அய்யர், திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், திருமகள் நடேச நாயணக்காரர், எட்டயபுரம் ராமச்சந்திர பாகவதர் போன்ற எல்லோராலும் ஒரு மனதாகப் பாராட்டப் பெற்றவர்.

அறுபத்து மூன்று நாயன்மார்கள் பற்றிய சொற்பொழிவுகளுக் காகவே ஐநூறுக்கும் மேற்பட்ட பாடல்களை, தமிழிலும் மராத்தியிலும் புனைந்து தந்ததுடன் சூலமங்கலம் வைத்தியநாத பாகவதருக்கு நிரூபணம் தயாரித்துக்கொடுத்து பாடம் செய்வித்து சென்னையில் ஸ்ரீ வைத்தியநாத பாகவதர் ஞாயிறு தோறும் ஹரி கதை நடத்துவதற்கு வழிகாட்டியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லிடைக்குறிச்சி வேதாந்த பாகவதருடன் ஸாஸ்திரியார் ஒத்துழைத்து அஷ்டபதிகளின் வர்ண மெட்டை சங்கீத உலகத்திற்கு அர்ப்பணம் செய்த சேவை பாராட்டுக்குரியதாகும். ஸரப ஸாஸ்திரிகளின் சீடர்களில் பல்லடம் சஞ்சீவ ராவ் அவர்களும், ஸரப ஸாஸ்திரிகளின் நெருங்கிய உறவினரான அஷ்டபுத்ர வெங்கட்ராம சாஸ்திரியும் முக்கியமாக குறிப்பிடதக்கவர் ஆவர்.

ஸரப ஸாஸ்திரிகள் தனது வாழ்நாளில் கும்பகோணம் சோலையப்ப முதலித் தெருவில் ஸ்ரீ ராம பஜனை ஸபா என்ற ஸ்தாபனத்தை நிறுவி, அதில் அவரது கையால் வரைந்த ஸ்ரீராம பட்டாபிஷேக படத்தையும் வைத்து ஏகாதஸீ பஜனைகளையும் செய்து வந்ததுடன், ஸ்ரீ ராம நவமி, ஸ்ரீ ராதா கல்யாணம் போன்ற உத்ஸவங்களையும், பல பெரிய வித்வான்களை வரவழைத்தும் வெகு சிறப்பாகக் கொண்டாடி வந்தார்.

ஸ்ரீ சரப சாஸ்திரிகள் வாசிப்பை, மைசூர் மகாராஜா கேட்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, 1904-ம் ஆண்டு, அரசாங்கத்தின் முக்கியமான ஒரு நபரை அனுப்பி சாஸ்திரிகளின் சௌகரியத்தை தெரிந்து வரக்கூறினார். சாஸ்திரிகள் அவர்கள், அரசாங்கத்திலிருந்து வந்தவரிடம், மகாராஜா அவர்கள் கூன் குருடுகளை நேரில் சந்திப்பது சரியில்லை. ஆதலால் மகாராஜாவின் முன்னிலையில் வாசிக்க நான் அருகதையற்றவன், என்று அடக்கமாக சொல்லி அனுப்பிவிட்டார். எனினும், மகாராஜாவின் ஆசையை நிறைவேற்றும் பொருட்டு அரண்மனைக்கு குறிப்பிட்ட தேதியில் சென்று மேடையில் ஒரு திரையின் பின் அமர்ந்து மகாராஜா கேட்ட பல கிருதிகளை வாசித்து மகிழ்வித்தாராம். மகாராஜா கேட்டுக்கொண்டும் ஸ்ரீ ஸரப ஸாஸ்திரி தன்னை போட்டோ எடுக்க அனுமதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் நம்மிடையே அவரது போட்டோ இல்லாதது ஒரு குறையாகவே உள்ளது. மகாராஜா ஸ்ரீ சாஸ்திரிகளுக்கு நிறைய சன்மானங்களைக் கொடுத்து அரசாங்க மரியாதையுடன் மைசூரிலிருந்து கும்பகோணம் அனுப்பிவைத்தார். வரும் வழியிலே ஜுரத்துடன் வீடு திரும்பியவர் வைத்திய சிகிச்சை செய்தும் பலனில்லாமல் 1904-ம் ஆண்டிலேயே, பகவான் ஆதி சங்கரரைப்போல் தனது 32-வது வயதில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

ஸ்ரீ ஸரப ஸாஸ்திரிகள் இன்று நம்மிடையே இல்லாவிட்டாலும் அவர்கள் ஆரம்பித்து நடத்திவந்த ஸ்ரீ ராம பஜனை சபா தொடர்ந்து பலரது ஆதரவினாலும் தெருவாசிகள் ஒத்துழைப்பாலும் சீரும் சிறப்புமாக ஸ்ரீ ராமநவமி உத்ஸவத்தை வருடாவருடம் கொண்டாடுகிறது. ஸ்ரீ காஞ்சி ஸ்வாமிகள் ஆசியருளியது போல், ஸ்ரீ ஸரப ஸாஸ்திரிகள் ஞாபகார்த்த மாக ஒரு நினைவு மண்டபம் கட்டி சபாவின் பணி தொடர்ந்து நடந்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மற்றும் அன்னதான சாலை ஒன்று அமைக்கவும் பாகவதர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதிகள் செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. □

# பாலகர்களுக்கு ஒரு கதை

நாம் எப்பொழுதும் எதற்கும் கர்வம் கொள்ள கூடாது. எவ்வளவு படித்திருந்தாலும் வினயத்துடன் நடந்து கொள்ள வேண்டும். நம்மைவிட படிக்காதவர்களையும், ஏழ்மையானவர்களையும், எளியவர்களையும் மதித்து நடக்க பழகிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும், முதலில் தங்களுடைய ஜீவனோபாயத்திற்காக ஒரு வழியை தேடிக்கொள்ள வேண்டும். அதை கசடற கற்க வேண்டும். அதற்கு பிறகு மற்ற கலைகளையும் ஒவ்வொன்றாக கற்க வேண்டும். சிறிய விஷயமாக இருப்பினும் சிரத்தையுடன் செய்ய வேண்டும். அதை முழு ஈடுபாடுடனும் மகிழ்ச்சியுடனும் செய்ய வேண்டும். யாரையும் ஏளனம் செய்யக் கூடாது. இந்த கருத்தை குரு மஹாராஜ் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு சிறிய கதையின் மூலம் அழகாக விளக்குவார்.

ஒரு ஊரில் மெத்த படித்த பண்டிதர் ஒருவர் இருந்து வந்தார். அவருக்கு தெரியாத சாஸ்திரங்களே இல்லை என சொல்லலாம். அதே சமயம், அவருக்கு கர்வமும் இருந்து வந்தது. யாரையும் மதிக்க மாட்டார். எல்லோரையும் வாதிற்கு இழுத்து அவமானப்படுத்துவார். படிக்காதவர் களை எல்லாம் ஏளனமாக பேசி பரிகசிப்பார். அந்த பண்டிதர், ஒரு சமயம் கங்கையில் படகு சவாரி செய்து கொண்டிருந்தார். அந்த படகை ஓட்டுபவனிடம் அந்த பண்டிதர் உனக்கு தர்க்கம் தெரியுமா? ஜோதிஷம் தெரியுமா? தர்ம ஸாஸ்திரம் தெரியுமா? நீதி ஸாஸ்திரம் தெரியுமா? ராமாயணம் தெரியுமா? பாரதம் தெரியுமா? பாகவதம் தெரியுமா? என்று ஒவ்வொன்றாக கேட்க அவனும் பரம வினயத்துடன் ஒன்றும் தெரியாது ஸ்வாமி என்று ஒவ்வொன்றுக்கும் பொறுமையாக பதில் சொல்லி வந்தான்.

அதை கேட்ட பண்டிதர் அட்டகாசத்துடன் சிரித்தபடியே உன்னுடைய வாழ்க்கையையே வீணடித்து விட்டாய். முட்டாளே! நான் எவ்வளவு விஷயங்களை தெரிந்து வைத்து கொண்டிருக்கிறேன் பார் என்று ஆர்ப்பரித்தார். சிறிது நேரம் கழித்து காற்று வேகமாக வீச ஆரம்பித்தது. படகானது ஆட ஆரம்பித்தது. வேகமாக வீச ஆரம்பித்த காற்றில் படகானது கவிழ ஆரம்பித்தது. அந்த சமயத்தில் படகோட்டி பண்டிதரைப் பார்த்து உங்களுக்கு நீந்தத் தெரியுமா? என்று கேட்டான். பண்டிதரோ, ஐய்யய்யோ! எனக்கு நீந்தத் தெரியாதே என்றார். அதற்கு படகோட்டி படகு சிறிது நேரத்தில் கவிழ்ந்து விடும். எனக்கு நீந்தத் தெரியும். நான் கரையேறி விடுவேன். உங்களுக்கு இவ்வளவு சாஸ்திரங்கள் தெரிந்திருந்தும் நீந்தத் தெரியாததால் தாங்கள் உயிர் பிழைக்க வழியில்லை என்று கூறி கரையேறினான். இதிலிருந்து நாம் மிகவும் வினயத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், யாரையும் ஏளனமாக பேசக் கூடாது என்றும் தெரிய வருகின்றது. ☐

# ஸ்ரீ குருஜியின் சம்பாஷணைகளிலிருந்து-28

மறுநாள், சோமாஸி நாயனார் சென்றவுடன், அவரை அனைவரும் ஆவலுடன் வரவேற்று சுந்தரரிடம் அழைத்துச் சென்றார்கள். சோமாஸி நாயனாருக்கு ஒரே சந்தோஷம். தான் இது நாள் வரை எதை உத்தேசித்து இந்த கைங்கர்யத்தை செய்து வந்தோமோ அது பூர்த்தியாகி விட்டதே என்று சுந்தரரும் சோமாஸி நாயனாரைப் பார்த்து இது நாள் வரை நீங்கள் தினமும் எனக்கு ஶ்ரத்தையுடன் கைங்கர்யம் செய்து வந்துள்ளீர்கள். உங்களின் உத்தேசம் என்ன? என்று வினவினார். அதற்கு சோமாஸி நாயனார் அவர்களோ, ''நீங்கள் தினமும் தியாகராஜ ஸ்வாமியுடன் அளவளாவி வருகின்றீர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அப்படி தேவரீர் ஸ்வாமியுடன் பேசுகையில் என் பொருட்டும் கொஞ்சம் பேச வேண்டும் என்றார். அதற்கு சுந்தரரோ உங்கள் பொருட்டு நான் ஈசவரனிடம் யாது வினவ வேண்டும் என்று கேட்க, சோமாஸி நாயனாரோ நான் மாசி மாதம் ஆயில்ய நக்ஷத்திரத்தில் ஸோம யாகம் செய்யப் போகின்றேன். அப்போது பரமேஸ்வரனே ப்ரத்யக்ஷமாகி வேள்வியில் கொடுக்கும் ஹவிஸை நேரில் வாங்கிக் கொள்ள வேண்டும் என்பது என் ஆசை. அதை நீங்கள் பரமேஸ்வரனிடம் ப்ரார்த்திக்க வேண்டும் என்று கூறினார். இதைக் கேட்ட சுந்தரரோ, ''நான் ஸ்வாமியிடம் தங்களுடைய ஆசையை எடுத்துக் கூறி பிரார்த்திக்கின்றேன். வருவதும், வராததும் ஸ்வாமியின் இஷ்டம் என்று கூறினார்.

சுந்தரர், ஸ்வாமியிடம் சோமாஸி நாயனார் பற்றி விஷயமாக ப்ரார்த்தித்தார். பரமேஸ்வரன், 'சுந்தரா! சோமாஸி நாயனாரின் ஆசை மிகவும் பெரிய ஆசையாக உள்ளது. இருந்தாலும் பரவாயில்லை அவன் எனக்கு கைங்கர்யம் செய்திருந்தாலும் கூட நான் அவன் விஷயத்தில் கடமைப்பட்டவனாக ஆகமாட்டேன். ஆனால், அவன் என் பரம பக்தனான உனக்கு தினமும் ச்ரத்தையுடன் தூதுவளை கீரை கொண்டு கொடுத்து கைங்கர்யம் செய்து வந்ததால், அவன் விஷயத்தில் நான் கடமை பட்டுவிட்டேன்' என்று கூறினார்.

இதிலிருந்து பரமேஸ்வரன் தனக்கு கைங்கர்யங்கள் செய்பவர்களைகாட்டிலும் தன் அடியவர்களுக்கு கைங்கர்யம் செய்பவர்களிடம் பரம ப்ரீதி அடைகிறார் என்பது தெரிகிறது. மேலும், பரமேஸ்வரன், சுந்தரரிடம் ''நான் அந்த வேள்வி சாலைக்கு எந்த ரூபத்தில் வேண்டுமானாலும் செல்வேன்'' என்று கூறி, ''ஆனால் இந்த விஷயத்தை ஸோமாஸி நாயனாரிடம் தெரிவிக்க வேணடாம்' என்று கூறி விட்டார். ஆகவே சுந்தரரும், சோமாஸி நாயனாரிடம் ''பரமேஸ்வரன் அன்று வேள்விச் சாலைக்கு வர சித்தமாய் உள்ளார்'' என்று மட்டும் தெரிவித்தார்.

மாசி மாதம் ஆயில்ய நஷத்திரத்தில், ஸோமாஸி நாயனார் தீர்மானித்தபடி மிகவும் ஶ்ரத்தையாக ஸோம யாகத்தை நடத்தினார். அந்த வேள்விச் சாலை, பூர்ணமாக வேத அத்யயனம் செய்தவர்களாலும் சிஷ்டாசார ஸம்பன்னர்களாலும் நிரம்பி வழிந்தது. அப்பொழுது பரமேஸ்வரன் ஒரு புலையனாக அழுக்கு வஸ்திரம் தரித்துக் கொண்டும் துர்கந்தம் மேனியிலிருந்து வரும்படியும் நான்கு வேதங்களையும் நான்கு நாய்களாக ஆக்கிக் கொண்டும் வேள்விச் சாலைக்குள் நுழைந்தார். அவருடைய தோள்களில் ஆடு, மாடுகளைக் கொன்று அதன் தோல்களை போர்த்திக் கொண்டிருந்தார். பக்கத்தில் பார்வதியோ ஒரு குடத்தில் மதுபானத்தை எடுத்துக்கொண்டு வந்தார். இவர்களைப் போன்ற அநேக புலயர்கள் அவர்கள் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள். இவர்களைப் பார்த்தவுடன், வேள்விச் சாலையில் இருந்த அந்தணர்கள் அனைவரும் தங்களுடைய ஆசார அனுஷ்டானங்களுக்கு பெரிய ஆபத்து சம்பவித்ததாக நினைத்து அலறி அடித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள். ஆனால், ஸோமாஸி நாயனாரோ, ''வந்திருப்பது பரமேஸ்வரனாகும். நீங்கள் எல்லாரும் ஓட வேண்டிய அவசியமில்லை என்று கூறி அவர்களை தடுத்து நிறுத்தினார். ஆனால், அவர்கள் யாரும் ஸோமாஸி நாயனார் சொன்னதை லக்ஷியம் செய்யாமல், தாங்கள் இதற்கு ப்ராயசித்தம் செய்து கொள்ளவேண்டும்'' என்று சொல்லி - அனைவரும் சென்று விட்டனர். அந்த வேள்விச் சாலையில் இருந்த எவராலும், வந்திருப்பது பரமேஸ்வரன் என்பதை புரிந்து கொள்ள முடியாதபோது ஸோமாஸி நாயனாரால் மட்டும் எப்படி புரிந்துகொள்ள முடிந்தது? இவர் நேராக பரமேஸ்வரனிடம் ப்ரார்த்தனை செய்யாமல் பரமேஸ்வரனின் பரம பக்தரான சுந்தரர் மூலமாக பகவானிடம் ப்ரார்த்தனை செய்ததே காரணம்.



சுந்தரரிடம் ஸோமாஸி நாயனார் கொண்டிருந்த குரு பக்தியும் சுந்தரருக்கு செய்துவந்த தொண்டும்தான் வந்திருப்பது பரமேஸ்வரன் என்பதைக் காட்டிக் கொடுத்தது. இதிலிருந்து ஒருவர் எத்தனைதான் வேதத்யயனம் செய்திருந்தாலும், ஆசார அனுஷ்டானங்கள் இருந்தாலும் அடியவர்கள் க்ருபை இருந்தால் தான் பகவானை புரிந்துகொள்ளமுடியும் என்பது தெரிய வருகிறது.

ஸோமாஸி நாயனார், பரமேஸ்வரனை விழுந்து விழுந்து நமஸ்கரித்தார். பரமேஸ்வரன் பார்வதி ஸஹிதரக ரிஷபாரூடனாக ஸோமாஸி நாயனாருக்கு காட்சி கொடுத்து அவரது விருப்பத்தைப் பரிபூரணமாக பூர்த்தி செய்து அருள் புரிந்தார்.

இப்படி வேதமும் பரமேஸ்வரனை புலையவனாகவும் குதிரையாகவும், குதிரை ஓட்டுபவனாகவும் பல விதத்தில் ப்ரார்த்திக்கின்றது. கிராமங்களில் ஒரு உத்ஸவம் நடக்கும் பொழுது, 'பொய்க்கால் குதிரை' என்ற ஒரு கிராமிய நடனமும் உண்டு. ஒரு மரத்தாலான குதிரையை உள்ளிருந்து ஒரு ஆசாமி ஆட்டுவிப்பது தான் இது. இதன் பொருள் என்னவென்றால், ''ஒவ்வொரு ப்ராணிகளின் சரீரத்தையும் பகவான்தான் அந்தர்யாமியாக இருந்து கொண்டு ஆட்டுவிக்கிறான்'' என்பதாகும்.

(தொடரும்)

**- முரளீதரதாஸன்**

| | | |
|---|---|---|
| முன் அட்டைப்படம் | : | சென்னை ப்ரேமிக பவனத்தில் ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜயந்தி அன்று ஸ்ரீஸ்வாமிகள், ஸ்ரீ மஹா பெரியவாள் பாதுகைக்கு அபிஷேகம் செய்கிறார். |
| பின் அட்டைப்படம் | : | நான்காம் ஆண்டு ப்ரஹ்மோத்ஸவ ராதா கல்யாணத்தில் உத்ஸவ மூர்த்தி, தாயாருடன் ஊஞ்சலில் எழுந்தருளியிருக்கிறார். |

Photos in this Issue by : Sri R. Kalyanakrishnan

# செய்திகள்

**நவம்பர் 11-ந் தேதி**

சென்னை ப்ரேமிக பவனத்தில் *"துளஸீ கல்யாணம்"* நடைபெற்றது. காலையிலும் மாலையிலும் கீத கோவிந்த அஷ்டபதிகள் பாடப்பட்டன. துளஸீ கல்யாணத்திற்குப் பிறகு ஸம்ப்ரதாய பஜனையும் இரவில் திவ்யநாம பஜனையும் நடைபெற்றது.

**நவம்பர் 14-ந் தேதி**

சென்னை ப்ரேமிக பவனத்தில் ராஸபூர்ணிமா - சைதன்ய மஹாப்ரபு ஜயந்தி மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டது. கீத கோவிந்த அஷ்டபதிகள் பாடப்பட்டன. ஸ்ரீமத் பாகவதம் மற்றும் நாராயணீயத்திலிருந்து ராஸாத்யாயம் பாராயணம் செய்யப்பட்டது. மாலையில் அஷ்டபதிகள் தொடர்ந்து பாடப்பட்டன. பிறகு கல்யாண அஷ்டபதி, சூர்ணிகை, லக்னாஷ்டகம் சொல்லி ஸ்ரீ ராதா மாதவ விவாஹம் நடைபெற்றது. இரவு 7 மணி முதல் ராஸபூர்ணிமாவை ஒட்டி நாம ஸங்கீர்த்தனம், திவ்யநாம பஜனை விடிய விடிய நடந்தது.

# நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்

**டிசம்பர் 11-ந் தேதி - கைசிக துவாதசி**

திருமழிசை க்ஷேத்ரத்தில் ஸ்ரீ ஜகன்னாத பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம், அலங்காரம் மற்றும் ஆராதனை நிகழ்த்தப்படும்.

**டிசம்பர் 13-ந் தேதி**

சென்னை ப்ரேமிக பவனத்தில் மாலையில் ஸ்ரீ விஷ்ணு கார்த்திகை தீபம் ஏற்றப்படும்.

**டிசம்பர் 16-ந் தேதி முதல்**

தனுர் மாத பூஜை ஆரம்பம்


**மங்களானி பவந்து**

# மதுரமுரளி

Registered as Newspaper in India

R. No. 62828/95 Regd. No. TN/MS(S)/714/97

வேணு:3 டிசம்பர் 1997 கானம்:5


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar